## 15.3 நெடுஞ்சாலைத்துறைக்குச் சொந்தமான நிலங்கள் வழியாக வேர்ல்டு டெல் நிறுவனம் கண்ணாடி இழை வடம் பதிக்க தளவாடகை நிர்ணயித்தல்

நெடுஞ்சாலை (எச்.என்.2) துறை

அரசாணை (நிலை) எண்.75 நாள் : 25.04.2000

படிக்க :

1. அரசு ஆணை எண்.5, தகவல் மறறும் தொழில் நுட்பத்துறை, நாள்: 28.02.2000.
2. அரசு ஆணை எண்.172, வருவாய்த்துறை, நாள் : 28.03.2000.

**ஆணை**

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் வேர்ல்டு டெல் (World Tel) என்னும் நிறுவனம் கண்ணாடி இழைவடம் (OFC) அமைக்க அனுமதி அளித்தும் அதற்கான தளவாடகைத் தொகை வருவாய்த்துறையில் நிர்ணயிக்கப்படவேண்டுமெனவும் ஆணை வெளியிடப்பட்டது. பார்வை இரண்டில் காணும் அரசாணையில் தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்கள் பொது வழிப்பாதை நிலங்களை பயன்படுத்த தளவாடகை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2.நெடுஞ்சாலைத்துறைக்குச் சொந்தமான தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலை ஓரங்களில் உள்ள நிலங்கள் வழியாக வேர்ல்டு டெல் நிறுவனம் (World Tel) கண்ணாடி இழை விடம் (OFC) அமைக்க வேண்டியுள்ளது. எனவே அரசு நன்கு ஆராய்ந்தபின் இதற்கு தளவாடகையாக பார்வை இரண்டில் குறிப்பிட்ட ஆணையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நிர்ணயித்து ஆணை வெளியிடப்படுகிறது :–

| வ.எண் | இனம் | நிர்ணயிக்கப்பட்ட தளவாடகை |
|---|---|---|
| 1 | கிராமசாலைகள் | ரூ.4,400/–<br>(1 கிமீ ஓராண்டிற்கு)<br>(தளவரி, தளமேல்வரி உட்பட) |
| 2 | பேரூராட்சி / நகராட்சி சாலைகள் | ரூ.5,500/–<br>(1 கி.மீ ஓராண்டிற்கு) |
| 3 | மதுரை, சேலம், கோயம்புத்தூர் , திருச்சி, திருநெல்வேலி, மாநகராட்சிகளில் உள்ள மாநில சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் | ரூ.63,00/–<br>(1 கி.மீ.ஓராண்டிற்கு) |
| 4 | சென்னை மாநகராட்சியில் மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் | ரூ.9,400/–<br>(1 கி.மீ.ஓராண்டிற்கு) |

இந்த தளவாடகை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மாற்றியமைக்கப்படும் எனவும் ஆணையிடப்படுகிறது.

3. கண்ணாடி இழை வடம் அமைக்க மேலே பார்வை ஒன்றில் குறிப்பிட்ட ஆணையில் உள்ள நிபந்தனைகளையும், கீழ்க்கண்ட நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ) மாநில நெடுஞ்சாலை ஓரங்களில் கண்ணாடி இழைவடம் அமைக்க தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களே அனுமதி வழங்க உரிமம் பெற்றுள்ளார். கண்ணாடி இழை விடம் பதிக்கும் முன்பு இது குறித்து அப்பகுதிகளில் கோட்டப் பொறியாளர்களுக்கு நேர்பாடு வரைபடம் தந்து அவர்களுக்கு தெரிவித்த பின்பு பணிகள் துவக்க வேண்டும்.

(ஆ) தேசிய நெடுஞ்சாலை ஓரங்களில் கண்ணாடி இழை வடம் அமைக்க தலைமைப்பொறியாளர் (தே.நெ) அவர்கள் வழங்கும் அனுமதியானது மைய அரசால் வகுக்கப்பட்ட வழிமுறைப்படி தரைவழிப்போக்குவரத்து அமைச்சகம் மற்றும் தேசிய நெடுஞ்சாலை குழுமம் ஆகியவைகளின் ஒப்புதலுக்கு உட்பட்டதாகும்.

(இ) தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலை ஓரங்களில் வடம் பதித்த பின்பு சாலைகளின் ஓரங்களை சரிசெய்யும் பணிக்கு ஆகும் செலவினை நிறுவனம் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் சீர்செய்யும் செலவுத்

தொகையை அந்தந்த நெடுஞ்சாலைப் பிரிவிற்கு தனித்தனியே ஒரே தவணையில் செலுத்த வேண்டும். நெடுஞ்சாலைத்துறையே இச்சாலை ஓரங்களை சீர்செய்யும் பணியை மேற்கொள்ளும்.

4. இவ்வரசாணை நிதித்துறையில் அ.சா.கு.எண்.1210/எம்.எஸ்/பி/2000, நாள் : 12.04.2000–ன் படி வெளியிடப்படுகிறது

(ஆளுநரின் ஆணைப்படி)

**எம்.அபுல் ஹாசன்**
அரசு செயலாளர்